# சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையின் அரசியற் கட்சிகளது தோற்றத்திலும் வளர்ச்சியிலும் மதத்தின் செல்வாக்கு

**சிறீரங்கன் பிரசாத்[1] & கே.ரீ.கணேசலிங்கம்[2]**

[1]வருகைதரு விரிவுரையாளர், வவுனியா கற்கை நிலையம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
[2]சிரேஷ்ட விரிவுரையாளர், அரசறிவியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
[1]sripirasath_87@yahoo.com, [2]saarusharon@gmail.com

**ABSTRACT:** நவீன அரசியலின் மையமாக அரசியற் கட்சிகளே விளங்குகின்றன. இன்றைய அரசாங்கம் கட்சி அரசாங்கம் என்று அழைக்கப்படுவதிலிருந்து அரசியல் கட்சியின் முக்கியத்துவத்தினை உணர முடிகின்றது. 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட பிரதிநிதித்துவ ஒழுங்கமைப்பும், வாக்குரிமை விஸ்தரிப்பின் தோற்றமும் அரசியற் கட்சிகள் தோன்றுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தியது. அரசியற் கட்சிகளது தோற்றத்தில் இனவாதம், மதம், தேசிய உணர்வு, பொருளாதாரம், சமூக அமைப்பு போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இந்த வகையில் இலங்கையில் டொனமூர் அரசியல் அமைப்பின் சர்வஜன வாக்குரிமையானது கட்சிகளின் தோற்றத்துக்கு வழிசமைத்தன. இலங்கையின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மத, இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றதோடு, ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய பிரதேச கட்சிகளும் தமது அரசியல் நலனை எட்டிக்கொள்வதற்கும், ஆட்சி அதிகாரத்தினை தக்கவைத்துக் கொள்வதற்கும் மதத்தினை முக்கிய கருவியாக பயன்படுத்தின. இந்த வகையில் சுதந்திரத்துக்குப் பின்னரான அரசியற் கட்சிகளின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் மதத்தின் செல்வாக்கினை மதிப்பிடுவது அவசியமாகின்றது. இவ்வாய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, வரலாற்று முறையியல், ஒப்பீட்டு முறையியல், பகுப்பாய்வு முறையியல் என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

**Keywords:** அரசியல் கட்சி, மதம், இலங்கையில் கட்சிமுறை, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

## 1. அறிமுகம்:

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இலங்கை அரசியலின் இயக்க சக்தியாக அரசியல் கட்சிகள் செயற்பட்டுவந்திருக்கின்றன. பிரித்தானிய ஆட்சியுடன் ஆரம்பிக்கும் இலங்கையின் அரசியற் கட்சிச் செயற்பாடுகள் சுதந்திரத்தின் பின்னர் மத, மொழி ரீதியான காரணங்களுடன் முனைப்புப் பெற்றன. இப்பின்புலத்தில் இலங்கை அரசியல் கட்சிகளின் அபிவிருத்தியில் மதத்தின் தாக்கத்தினை அளவீடு செய்வதனையும் முதற்தர நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 2. இலக்கிய மீளாய்வு:

சிவராஜா.அ,'இலங்கை அரசியல்' (2006) எனும் நூலில் இலங்கையில் கட்சிமுறையின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும், அரசியல் யாப்புக்களிலும் மதத்தின் செல்வாக்கினை விபரித்துள்ளார்.

குமாரி ஜயவர்த்தன,'இலங்கையின் இன வர்க்க முரண்பாடு' (1995) என்ற நூலில் இலங்கையின் இன வர்க்க முரண்பாட்டில் அரசியற் கட்சிகளின் மதம் சார்ந்த கொள்கைகள் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதனை இடதுசாரிப் பார்வையில் நோக்கியிருந்தமை இந்த ஆய்வுக்கு அதிகம் உதவக்கூடியதாகும்.

குணரத்தினம்.வே,'அரசியற் கட்சிகள் அமுக்கக் குழுக்கள் பொதுசன அபிப்பிராயம்' (2009) என்ற நூலில் அரசியற் கட்சிகளின் தோற்றத்தினையும், அதன் வளர்ச்சியையும் விமர்சனப் பார்வையில் நோக்கியுள்ளார்.

யோதிலிங்கம்.சி 'இலங்கையில் அரசியல் கட்சி முறைமை' (2008) என்ற நூலில் அரசியல் கட்சிகளின் தோற்றத்தினையும், அக் கட்சிகளது கொள்கைகள், அவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் என்பவற்றினையும் புலப்படுத்தியுள்ளார்.

Urmila Phadnis என்பவரின் Religion and Politics in Srilanka(1976) எனும் நூல் புத்திஜீவி வர்க்கத்தின் ஒரு அங்கமான பௌத்த மதகுருமார் இலங்கையின் அரசியல் வரலாற்றில் 1950களின் முற்பகுதியிலும் நடுப்பகுதியிலும் சுயமான இயக்கமாக அரசியல் அரங்கில் செயற்பட்டதோடு, அரசியல் மாற்றத்துக்கான கருவியாகவும் விளங்கியிருந்த தன்மையினையும், சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் சிங்கள பௌத்தம் என்ற கருத்தியலின் மூலம் தேசியவாதத்தினை ஊக்குவித்திருந்த தன்மையினையும் தெளிவுபடுத்துவதாக உள்ளது.

**3. ஆய்வு முறையியலும், தரவு சேகரித்தலும்:**

இவ்வாய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. குறிப்பாக அரசியல் யாப்புக்கள், அரசியல் கட்சிகளில் மதத்தின் வகிபங்கு தொடர்பான நூல்கள், பருவ இதழ்கள், தேசிய பத்திரிகைகள், அறிக்கைகள், இணையத்தளக் கட்டுரைகள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு இரண்டாம் நிலைத் தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அத்தோடு இவ் ஆய்வானது வரலாற்று முறையியல், ஒப்பீட்டு முறையியல், பகுப்பாய்வு முறையியல் என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

**4. திறனாய்வு:**

இலங்கையின் கட்சிமுறை வரலாறு ஒப்பீட்டளவில் குறுகியதாகும். டொனமூர் அரசியல் அமைப்புக் காலப்பகுதியிலேயே இலங்கையில் கட்சிகளின் செயற்பாட்டினை அவதானிக்க முடியும். ஆனால் 1920ம் ஆண்டு ஏ.ஈ.குணசிங்கவின் தலைமையிலான தொழிற்கட்சி முதல் அனுபவமாக உள்ளது. ஆனால் அது கொழும்பு நகர தொழிலாளர்களை இணைத்துக் கொண்டது மட்டுமல்லாது தனியொரு மனிதனை மையமாகக் கொண்டிருந்த காரணத்தால் கட்சிமுறையிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது. 1935ம் ஆண்டு முதன்முதல் சோஸலிஸ சிந்தனைக்குள் கவரப்பட்ட இளைஞர்களால் இலங்கை சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்சி சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் நடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டிருந்தது. அதே போன்று இலங்கை ஆட்சி மாற்றத்ஜ ஏற்படுத்துவதனையும், இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து பெற்றுக் கொடுப்பதனையும் நோக்கமாகக் கொண்டு 1946ம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்காவின் தலைமையின் கீழ் ஒரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி (UNP) உருவாக்கப்பட்டது. இக்கட்சியில் முஸ்லீம்லீக், சிங்கள மகாசபை என்பனவும் இணைந்து கொண்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினராக இருந்த பண்டாரநாயக்காவுக்கும், கட்சித் தலைமைப் பீடத்துக்குமிடையே அரசாங்கக் கொள்கைகள் சம்மந்தமாக சில கருத்து வேறுபாடுகள் தோன்றின. இதன் காரணமாக 1951ல் சிங்கள மகாசபையின் இடத்தில் ஒரு நடுவழிப் போக்குள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அவர் தோற்றுவித்தார். இக்கட்சியின் தோற்றத்தோடு வலதுசாரி இடதுசாரி என பிரிந்து காணப்பட்ட இலங்கையின் கட்சிமுறையில் ஒரு புதிய போக்கு தென்படலாயிற்று. இரு பிரதான கட்சிகளுடன் ஏனைய சிறிய கட்சிகள் அல்லது பல கட்சிகள் உருவாகியது எனலாம்.

இரு கட்சிகளும் உருவாவதற்கு தனித்துவமான காரணங்கள் அமைந்தாலும் அவை வளர்ச்சியடைய மதம் பிரதான உந்துசக்தியாக அமைந்தது. அதில் பண்டாரநாயக்காவின் பங்கு தனித்துவமானது. அவர் சிங்கள மகாசபையைப் புணரமைத்ததுடன், அவர் சிங்கள, பௌத்த மறுமலர்ச்சிக்கு தலைமை தாங்கவும் முற்பட்டார். இவ்வகையில் 1950களில் இருந்து பௌத்த மதத்திற்கு விசேட அரசியல் அமைப்பு ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதனை வற்புறுத்தி வருவதனைக் காணலாம். அவ்வகையில் நாடு முழுவதும் பௌத்த மதமே அரசாங்க மதமாக்கப்பட என்ற கருத்து மேலோங்கியது. இவ்வகையில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா சிங்கள மொழியைப் போலவே பௌத்த மதத்தையும் கருவியாகப் பயன்படுத்த ஆரம்பித்தார். இக்காலகட்டத்திலே பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிங்கள மொழியை அரசாங்க மொழியாக்குவதில் கொண்டிருந்த அதேயளவு ஆர்வத்தைப் பௌத்த மதத்தை அரசாங்க மதமாக்குவதிலும் கொண்டிருந்தது. சிங்கள, பௌத்த மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் தனிக்கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தன்னை இனங்காட்டிக் கொண்டது. இப் பின்னணியிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு சிங்கள பௌத்தர்களின் ஆதரவு அதிகரிக்கத் தொடங்கியது. பௌத்த சங்கமும் அதன் பிக்குகளும் பண்டாரநாயக்காவின் பின்னால் அணிதிரண்டனர்.

புத்த ஜெயந்தி தினக் கொண்டாட்டங்களைத் தொடர்ந்து 1956ம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரச்சாரத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் சொந்தக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக்

கட்சியின் தேர்தல் அறிக்கையிலே பௌத்த மதம் குறித்து கூடிய ஈடுபாடு, முக்கியத்துவம் காட்டப்பட்டிருந்தது. அதில் நானூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிபுரிந்த மேலைத்தேய ஏகாதிபத்திய ஆட்சியாளர் பௌத்த மதத்தின் செல்வாக்கை அழிக்கும் வகையில் திட்டமிட்ட கொள்கையைக் கடைப்பிடித்தனர் என்றும், இலங்கையின் கலாசார தேசிய வாழ்வில் ஒன்றிணைந்ததாக பௌத்தம் விளங்குகின்றது எனவும், பௌத்த மதத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியை நீக்குவது அவசியமானது என்றும் குறிப்பிட்டிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் அறிக்கையிலும் பெரும்பான்மை மக்களின் மதமாக பௌத்தம் அங்கீகரிக்கப்படுவதாகவும், ஏனைய மதப் பிரிவினருக்கு பாரபட்சம் காட்டப்படமாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் தேசிய விழாவான புத்த ஜெயந்திக் கொண்டாட்டங்களிலே கூடிய ஈடுபாடு காட்டப்படும் எனவும், பௌத்த தலங்களைப் புணரமைக்கும் பணியில் ஈடுபட்டுப் பௌத்த மதத்தின் விசாரணைக்குழுவின் அறிக்கையில் கூடிய கவனம் செலுத்தும் எனவும் கூறியது.

புத்த ஜெயந்திக் கொண்டாட்ட நடவடிக்கைகளும், பௌத்த மக்களிடையே தீவிர இன, மத, மொழி அடையாளத்தை வளர்த்து விட்டிருந்தது. 'மகாசன எக்சபத் பிரமுன' (M.E.P) கூட்டணியினரின் பிரச்சாரங்களும்,'எக்சத் பிக்கு பெரமுன' (E.B.P) போன்ற பௌத்த பிக்குமார்களின் இயக்கங்களின் நடவடிக்கைகளும் பௌத்த மதத்தின் வீழ்ச்சிக்கு மேலைத்தேய ஏகாதிபத்தியமும், கத்தோலிக்க திருச்சபையும், சுதந்திரத்தின் பின்பாக ஆட்சி புரிந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கங்களும் காரணமாயின என்பதனை சாதாரண சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டின. ஏக்சத் பிக்கு பெரமுனயின் பிக்குகள் மகாசன ஏக்சத் பெருமுனக்கு ஆதரவாக அரசியல் கூட்டங்களில் பேசியது மட்டுமல்ல வீடு வீடாகச் சென்று ஆதரவும் திரட்டினர். அவர்களின் பிரசார சுலோகமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு அளிக்கும் வாக்கு கத்தோலிக்கருக்கு அளிக்கும் வாக்காகும் என்பதும், மகாசன ஏக்சத் பெரமுனக்கு அளிக்கும் வாக்கு பௌத்தர்களுக்கு அளிக்கும் வாக்காகும் என்பதும் அமைந்திருந்தது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவைத் தலைவராகக் கொண்ட மகாசன ஏக்சத் பெரமுன கூட்டணியானது பௌத்த அடையாளங்களை மிகத் திறமையான வகையிலே கையாண்டு நாட்டுப்புறச் சிங்கள மக்களிடையே பெரும் ஆதரவினைத் தேடிக்கொண்டது. இப்பின்னணியில் சிங்கள, பௌத்த கலாசாரத்தின் அடிப்படையில் புதிய சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்ப முற்பட்ட மகாசன எக்சத் பெரமுனக்கு பௌத்த பிக்குமார், ஆயுள்வேத வைத்தியர், சிங்கள மொழிமூல பாடசாலை ஆசிரியர், மரபுவழிக் கிராமத் தலைவர்கள் தங்கள் முழு ஆதரவையும் வழங்கலாயினர். இவ்வாறு மத்திய வகுப்பின் கீழ் மட்டத்தில் காணப்பட்ட பெரும்பாலான சிங்கள பௌத்த மக்களின் ஆதரவை மகாசன எக்சத் பெரமுன பெற்றுக் கொண்டது. மகாசன எக்சத் பெரமுன இவர்களின் பிரச்சாரங்களின் போது பௌத்த சிங்கள கலாசாரத்தில் வேரூன்றியிருந்த சிங்களப் பொது மக்களின் கட்சியாகத் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டது.

1956இன் பொதுத் தேர்தலில் மகாசன எக்சத் பெரமுன கூட்டணியினர் 51 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்று மாபெரும் வெற்றியைப் பெற்றனர். கூட்டணியின் பிரதான கட்சியாகிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி 41 ஆசனங்களைப் பெற்று தனிமுதன்மையைப் பெற்றுக் கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சி படு மோசமான முறையிலே தோற்கடிக்கப்பட்டு 8 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இலங்கையின அரசியல் பொருளாதார சமூக வரலாற்றிலே 1956ம் ஆண்டு தனியானதொரு முக்கியத்துவத்தினைப் பெற்றுக் கொண்டது. அந்த ஆண்டு இலங்கையின் பௌத்தமத வரலாற்றில் அதிமுக்கியத்துவம் பெற்ற ஆண்டாக காணப்பட்டது. புத்த ஜெயந்தி, பௌத்த விசாரணைக் குழுவின் அறிக்கை, பௌத்த மதத்தைப் புணரமைத்து அதற்குரிய இடத்தை வழங்க வாக்குறுதி அளித்த அரசியல் கட்சியின் தேர்தல் வெற்றி, பிரதான அரசியல் சக்தியாக பௌத்த சங்கம் எழுச்சி பெறல் என்பவற்றைக் குறித்த ஆண்டாக 1956ம் ஆண்டு விளங்கியது. பெருமளவிலே, இன, மொழி, மத உணர்வுகளைத் தூண்டிவிட்டு அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான வழியைக் காட்டிய ஆண்டாகவும், சிங்கள பௌத்த பெரும்பாண்மை மக்களின் மேலாதிக்கம் ஏனைய சிறுபான்மை மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட ஆண்டாகவும் அமைகின்றது. இனவாத அரசியலை வளர்ச்சிப்படுத்தியதன் மூலம் இலங்கையின் ஐக்கியம், ஒருங்கிணைப்பு, அபிவிருத்தி என்பவற்றிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வைத்த காலப்பகுதியின் ஆரம்பத்தையும் அது குறித்து நின்றது.

1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிவுகள் இலங்கையின் கட்சிமுறை அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தியதுடன் அரசியலில் ஒரு திருப்புமுனையையும் ஏற்படுத்தியது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தான் அளித்த வாக்குறுதிகளை

நிறைவேற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவ்வகையில் முதலாவதாக கலாசார அலுவல்கள் அமைச்சு என்ற புதிய அமைச்சை ஏற்படுத்தினார். கலாசார அலுவல்கள் அமைச்சு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே பௌத்தமத விவகாரங்களில் ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்டதாக இயங்கத் தொடங்கியது. இதனால் இலங்கையில் வாழ்ந்த ஏனைய மதப் பிரிவினர் பாதிக்கப்பட்டனர். 1954ல் UNP அரசாங்கம் புத்த ஜயந்தி தின நிகழ்வுகளை ஒழுங்கமைக்கவும், வழிபடுவதற்குமென நியமிக்கப்பட்ட லங்கா பௌத்த மடாலயத்தின் நீண்டகாலத் திட்டங்கள் பல இப்புதிய அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன. அவற்றுள் முக்கியமானவையாக புத்த ஜயந்தி ஞாபகார்த்த கட்டிடங்கள் அமைத்தல், தலதா மாளிகையின் புணரமைப்பு, பௌத்த கலைக்களஞ்சியம், சிங்கள, பாளி திரிபீடகங்கள் என்பவற்றின் தொகுப்பும் பதிப்பும் காணப்பட்டன. கலாசார அமைச்சின் கீழே இந்து, முஸ்லீம் மத விவகாரங்களுக்கான ஆலோசனை சபைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அவை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே கவனிக்கப்பட்டன. பௌத்த நிகழ்ச்சித் திட்டங்கள் நேரடியாகவும் ஒழுங்காகவும் இவ் அமைச்சினால் நிர்வகிக்கப்பட்டன.

தொடர்ந்து 1970ம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலிலே மூன்றில் இரண்டு ஆசனங்களைப் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் என்பவற்றின் கூட்டரசாங்கம் முதலாவது சுதேசிய யாப்பொன்றை வரைந்து கொண்ட போது அதன் இரண்டாவது அத்தியாயம் இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு பிரதான இடம் வழங்குமெனப் பிரகடனப்படுத்தியது மாத்திரமன்றி, பௌத்த மதத்தைப் பாதுகாத்துப் பேணுவது அரசின் கடமையென்றும் எடுத்துக் கூறியது. ஏனைய எல்லா மதங்களும் யாப்பின் பகுதி 18(1) வழங்கும் உரிமைகளைப் பெறும் என உறுதிகூறப்பட்டது.

அடுத்து வந்த அரசாங்கமாகிய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் 1978ல் ஜனாதிபதி ஆட்சி யாப்பொன்றை ஏற்றுக்கொண்ட போது அந்த யாப்பின் ஒன்பதாவது பகுதி முன்போன்றே பௌத்தத்திற்கு முதன்மை அந்தஸ்து வழங்கி, அதனைப் பேணிப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை என்றும் கூறிய போது அது எவ்வகையிலும் ஆச்சரியம் தருவதாயிருக்கவில்லை. ஏனைய மதங்களின் உரிமைகள் 10, 14(1) என்பவற்றின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

இவ்வாறு ஆட்சிக்கு வருகின்ற அரசியற் கட்சித் தலைவர்கள் அஸ்கிரிய, மல்வத்தை, அமபுர, ராவண்ண ஆகிய பௌத்த பீடங்களுடன் நல்லுறவினை வளர்க்க முற்படுகின்றன. அது மட்டுமன்றி நாட்டின் தலைவராக வருகின்ற ஒருவர் பௌத்தத்தை பின்பற்றுபவராக இருப்பதோடு அவர்களின் ஆசீர்வாதத்தினையும் பெற்றுக் கொள்கின்றனர். மேலும் பௌத்த துறவிகளும் அரசியற் கட்சிகள் மூலம் அரசியலில் ஈடுபடுவதிலிருந்து அரசியல் கட்சியில் மதத்தின் செல்வாக்கினை புரிந்துகொள்ள முடியும்.

இலங்கையில் பல்வேறு கட்சிகள் காணப்பட்டாலும் கூட ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அரசியலில் முக்கிய இடம்பெறுகின்றன. இவற்றில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி தாராண்மைவாதப் போக்கினை கொண்டிருந்தமையினால் ஆரம்பத்தில் கட்சியின் கொள்கையில் எந்த மதத்துக்கும் முன்னுரிமை கொடுக்காது எல்லா மதத்திற்கும் சம அந்தஸ்தினை வழங்கும் நோக்கினை டி.எஸ்.சேனநாயக்கா கொண்டிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் மந்திரிகளில் ஒருவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா அரசியல் அதிகாரத்தினை கைப்பற்றுவதற்கு சிங்கள மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றி இருந்த பௌத்த மதத்தினை ஒரு கருவியாக பயன்படுத்தியோடு, சிங்கள மகா சபையினை புணரமைப்புச் செய்து அதன் மூலம் 1951ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். 1956ல் பொதுத் தேர்தலில் மத, மொழி உணர்வினை தூண்டிவிட்டு அரசியல் அதிகாரத்தினை கைப்பற்றினார். அளித்த வாக்குறுதிக்கு இணங்க கலாசார அமைச்சினை உருவாக்கினார். உயர் பௌத்த பிரிவேனாக்களாக இருந்த வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனாக்கள் தரம் உயர்த்தப்பட்டு பல்கலைக்கழக அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்டன. அத்தோடு இலங்கையின் பௌத்த காங்கிரஸின் மத நடவடிக்கைகளுக்காக வருடாந்த மானியம் அரசினால் வழங்கப்பட்டது. இவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மதவாதக் கொள்கையின் வளர்ச்சியினை எடுத்துக்காட்டுகின்றது.

1963ல் ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் பௌத்த மதத்துக்கு முதன்மை வழங்க முன்வந்தமையானது அரசியல் ஆதாயத்தோடு மேற்கொள்ளப்பட்ட விடயமாகும். 1965 ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சித்துறை அமைச்சராக இருந்த திரு.எம்.திருச்செல்வம், கோணேஸ்வர பிரதேசத்தை இந்துக்களின் புனித பூமியாக்க நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு

குழுவினை நியமித்தார். ஆனால் திருகோணமலை சேருவெல விகாராதிபதி கோணேஸ்வரம் பௌத்த புனித தலம் என அரசிடம் அறிக்கை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து அப்பிரதேசம் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டமையானது ஐக்கிய தேசியக் கட்சியின் மதசார்பினை எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் கிறிஸ்தவ மதத்தின் புனித நாளாகிய ஞாயிற்றுக் கிழமை நாட்டின் வாராந்த விடுமுறை நாளாக இருந்தது. இதைப் போன்று சிங்கள பௌத்த மக்களின் விருப்பினை நிறைவு செய்யும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி போயா தினத்தினை விடுமுறை தினமாக மாற்றியமைத்தது. இந்த வகையில் இரு பிரதான கட்சிகளும் ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றிக் கொள்வதற்காக மதத்தினை முன்னிறுத்த முனைந்தனர். அந்த வகையில் 1972ம் ஆண்டு 1ம் குடியரசு யாப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பௌத்தத்தை அரச மதமாக ஏற்றுக் கொண்டதோடு, 1978ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியும் பௌத்த மதத்தினை அரச மதமாக ஏற்றுக் கொண்டது. இவை அக்கட்சிகளின் வளர்ச்சியில் மதத்தின் செல்வாக்கினை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மேலும் பௌத்த பீடங்களாக விளங்கும் அஸ்கிரிய, மல்வத்த ஐக்கிய தேசியக் கட்சிக்கும், அமரபுர, இராவண்ண என்பன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தமது ஆதரவினை வெளிப்படுத்தியுள்ளதோடு, ஆட்சிக்கு வருகின்ற கட்சிகளோடு தமது உறவினை பலப்படுத்தி பௌத்த அரசியலை மேற்கொள்ள முயற்சிக்கின்றன. மேலும் ஆட்சியைக் கைப்பற்றுகின்ற ஆட்சியாளர்கள் பதவி ஏற்பது முதல் அனைத்து அரசியல் செயன்முறைகளையும் பௌத்த தலைவர்களின் ஆசியினையும், ஆதரவினையும் பெற்றே முன்னெடுக்கின்றனர்.

இவற்றைவிட பிரதேச ரீதியாக எழுச்சி பெற்ற கட்சிகள் தத்தமது மதங்களை பாதுகாப்பவையாகவும், ஆதரவு வழங்குபவையாவும் உள்ளன. இலங்கை தமிழ் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தமது கொள்கைகளில் இந்து மதத்தினை முதன்மைப்படுத்துவதாக உள்ளன. அதேபோன்று ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி, தேசிய முஸ்லீம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் போன்றன முஸ்லீம் மக்களின் நலனினைப் பேணுவதும், இஸ்லாமிய மதத்திற்கு ஆதரவு வழங்குவதுமான கொள்கைகளைக் கொண்டுள்ளன. மேலும் ஜாதிகஹல உறுமய, பொதுபலசேன, இராவணன் வலய, தேசிய முன்னணி போன்ற ஏனைய கட்சிகளும் இலங்கையை ஒரு பௌத்த இராட்சியமாக உருவாக்குவதனை பிரதான கொள்கையாக கொண்டுள்ளன.

**5. முடிவுரையும் பரிந்துரையும்:**

இந்த வகையில் இலங்கையின் பிரதான கட்சிகளும், சிங்கள தேசியவாத கட்சிகளும் பௌத்த மதத்துக்கு முதன்மை வழங்க வேண்டும் என்ற சிந்தனையோடு செயற்படுகின்றன. தேரவாத பௌத்த தலைமைகள் மதத்தலைவர்களாக மட்டுமல்லாது பெரும்பாண்மை இன அரசியற் கட்சிகளை வழிநடத்தும் சக்தியாகவும் இயங்கி வருகின்றனர். அதேபோல் சிறுபான்மையினக் கட்சிகள் தமது மத சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் மதத்தினை தமது கட்சியின் கொள்கைகளில் உள்வாங்குகின்றனர். இவ்வாறு இலங்கையின் அரசியற் கட்சிகளின் தோற்றதிலும் வளர்ச்சியிலும் மதவாதம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இது சிறுபான்மை மத சுதந்திரத்தை பாதிக்கின்ற; மற்றும் இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் காரணியாக மாறியுள்ளது. குறிப்பாக அண்மைகாலமாக முஸ்லீம் பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், இந்துக் கோவில்கள் போன்றன பௌத்த தேசியவாதிகளால் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக கட்சிகள் தமக்கு ஆதரமான மதக் குழுக்களோடு தொடர்பு கொண்டிருப்பதனை ஆட்சியிலுள்ள அரசாங்கமும் கவனத்திலெடுப்பதில்லை. எனவே சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் ஆட்சி அதிகாரத்தினைத் பெற்றுக் கொள்வதோடு அதனை தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டான சியல் ஆதாயத்தோடு மதவாதம் அரசியற் கட்சிகளின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தியிருப்பதனை ஐயத்திற்கு இடமின்றி அறிய முடிகின்றது.

**6. உசாத்துணைகள்:**

கீதபொன்கலன், ச. (1987), பௌத்த சிங்களவரும் சிறுபான்மையினரும், செரோ வெளியீடு: சென்னை.

குணவர்த்தன, எச். (1985), சிங்களத்தின் வழிவந்தோர் - வரலாற்றிலும் சிங்கள உணர்வு - இனத்துவமும், சமூகமாற்றமும், சமூக விஞ்ஞானக் கழகம்: யாழ்ப்பாணம்.

குணரத்தினம், வே. (2009), அரசியற் கட்சிகள் அமுக்கக் குழுக்கள் பொதுசன அபிப்பிராயம், குமரன் புத்தக இல்லம். கொழும்பு.

குமாரி ஜயவர்த்தனா. (1979), இலங்கை இனத்துவமும் சமூக மாற்றமும், புனிதவளை கத்தோலிக்க அச்சகம்: யாழ்ப்பாணம்.

பேட்ராம் பஸ்தியாம்பிள்ளை. (1992), தென்னாசியாவில் பன்மதச் சமூகங்களில் மதச்சார்பின்மை, மார்க்கம், சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வு.

திருநாவுக்கரசு, மு. (1991), “இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்”, தமிழ்த்தாய் பதிப்பகம்: யாழ்ப்பாணம்.

சர்ஜீன்.ஏ, றிபான்.ஏ.எம். (2012), சமகால அரசறிவியல் எண்ணக்கருக்கள்,இஸ்லாமிக் புக் ஹவுஸ்: கொழும்பு.

சிவராஜா, அ. (2006), இலங்கை அரசியல். குமரன் புத்தக இல்லம்: கொழும்பு.

URMILA PHADNIS. (1976), Religion and Political Culture in Srilanka. Monobar: New Delhi.

DESILVC.R., & WESUMPERUMA, D. (1998) Political Culture in Srilanka. Colombo

THIRUCHELVAM.D, & DATTATHRETA, E.S. (1998) Culture and Politics of Identity in Srilanka. International Centre on studies: Colombo.

SENEVIRATNA, H.L (2002), Buddhism, Identity and Conflict. International Centre for Ethnic Studies: Colombo.